## நாட்டிற்காக வாக்களியுங்கள்

நான் 20.3.2014-ஆம் நாளன்று பஞ்சாப் மாநிலம் ரோபாரில் மாணவர்களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சிக்காக சென்றிருந்தேன். அங்கு கூடியிருந்த பெருந்திரளான இளம் மாணவர்கள் மற்றும் மாணவியர்களை சந்தித்தேன். அக்கூட்ட அரங்கிற்குள் செல்லும் போது, பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த இரு மாணவிகள் மற்றும் நான்கு மாணவர்கள் என்னை அணுகி, எனது உரை மற்றும் கலந்துரையாடலை தொடங்குவதற்கு முன் அவர்களின் முக்கியமான கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்குமாறு கேட்டுக் கொண்டனர். அவர்கள் என்னிடம் தெரிவித்தது:

> “ஐயா, நாங்கள் நம் நாட்டின் எந்த ஒரு பகுதிக்கும் கல்விச் சுற்றுலா அல்லது இன்ப சுற்றுலா செல்லும் போதும் அவ்விடத்திலுள்ள இளைஞர்களுடன் உரையாடியிருக்கிறோம். அவர்களில் பெரும்பாலானோர் எங்களை ஒத்த வயதுடையோர், அதாவது 16-18 வயதிற்கு மேல். அவர்களிடம் வாக்களிப்பது தொடர்பாக உரையாடும் போது, அவர்கள் எந்தவொரு பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினருக்கும் நம்மை ஆளும் தகுதியில்லையாதலால் வாக்களிக்கப் போவதில்லை என்று தெரிவித்தனர். நாங்களும் அவ்வாறே கருதுவதால் நடைபெறவிருக்கும் தேர்தலில் வாக்களிக்கப் போவதில்லை. ஐயா, நாங்கள் சரியான முடிவை எடுத்துள்ளோமா என்று கூறுங்கள்”.

நான் அவர்களிடம், “நண்பர்களே நான் உங்களுடன் முழுவதுமாக ஒத்துப்போகவில்லை. நான் எனது எண்பது வருட வாழ்க்கையில் பல பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற தேர்தல்களை பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு தேர்தலிலும், நான் சரியான வேட்பாளருக்கு வாக்களித்துள்ளேன். ஒவ்வொரு தேர்தலிலும் பல வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். அவர்களில் சிலர் புதியவர்களாக இருக்கலாம் ; பெரும்பாலான சமயங்களில் தற்போதைய பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினரே போட்டியிடுவர். நீங்கள் அவர்களுக்குள், வேட்பாளர்களின் சமுதாயத்திற்கான உழைப்பு மற்றும் பங்களிப்பின் அடிப்படையில் சிறந்த வேட்பாளரை தேர்வு செய்ய வேண்டும். பல சமயங்களில், வேட்பாளர்களின் தொகுதியில் அவர்களுடைய பங்களிப்பு மற்றும் பாராளுமன்ற / சட்டமன்ற

செயல்பாடு வெளிப்படையாக தெரிகிறது; மேலும் அவர்களின் செயல்பாடு குறித்த தகவல்கள் ஊடகம் மற்றும் இணையத்தில் உள்ளன. வேட்பாளர்களின் செயல்பாட்டினைப் பொறுத்து நீங்கள் உங்களுக்குள் கலந்தாலோசித்து, சிறந்த, நேர்மையான, செயல்படும் வேட்பாளருக்கு வாக்களியுங்கள். ஏனெனில் "வாக்களிக்கும் உரிமை" என்பது விலைமதிப்பில்லாத ஒன்றாகும். அவ்வுரிமையை பயன்படுத்தி ஒரு சரியான வேட்பாளரை பாராளுமன்றத்திற்கோ சட்டமன்றத்திற்கோ அனுப்புவது இன்றியமையாததாகும். இதன் மூலம் இளைஞர்களான நீங்கள் நம் நாட்டில் மத்தியிலோ மாநிலத்திலோ ஒரு நல்ல அரசாங்கம் அமைத்திட உதவி புரிகிறீர்கள். தகுந்த வேட்பாளருக்கு நீங்கள் வாக்களித்தால், இந்த நாடு உங்களுக்கு நன்றியுடையதாக இருக்கும்''.